©
GOVERNMENT OF TAMIL NADU
2015

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 40A] சென்னை, திங்கட்கிழமை, பிப்ரவரி 23, 2015
மாசி 11, ஜயு, திருவள்ளுவர் ஆண்டு-2046

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2015–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2015**

**2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டத்திற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

1. (1) இந்தச் சட்டம், 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (திருத்தச்) சட்டம் என வழங்கபெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 27/2014. 2. 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் 3 ஆம் பிரிவிலுள்ள (2) ஆம் உட்பிரிவில், ‘‘தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர் படிநிலைக்குக் குறையாத அரசு அலுவலராக இருந்திருக்கிற நபர் ஒருவர் முறைமன்ற நடுவராக பணியமர்த்தம் செய்யவேண்டும்’’ என்கின்ற சொற்றொடருக்கு பதிலாக, ‘‘தமிழ்நாடு அரசுச் செயலாளர் படிநிலைக்குக் குறையாமல் இருந்த மற்றும் / அல்லது இருந்திருக்கிற அரசு அலுவலர் ஒருவர் முறைமன்ற நடுவரொருவராக பணியமர்த்தம் செய்யவேண்டும்’’ என்று அழைக்கப்படுதல் வேண்டும். 3–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**<u>நோக்க–காரண விளக்கவுரை</u>**

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2014) 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில் ஆளுநரால் தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர் படிநிலைக்குக் குறையாமல் அரசு அலுவலராக இருந்திருக்கிற நபர் ஒருவர் முறைமன்ற நடுவராக பணியமர்த்தம் செய்யப்படலாம். அதிக அளவிலான தகுதியுடைய அலுவலர்கள் கிடைக்கும் இடத்திலிருந்து பெற்று முறைமன்ற நடுவராக பணியமர்த்தம் செய்யப்படுவதற்காக, தமிழ்நாடு அரசின் அரசுச்செயலாளர் படிநிலைக்குக் குறையாத அரசு அலுவலரொருவராய் இருந்த மற்றும் / அல்லது இருந்திருக்கிற நபர் ஒருவர் முறைமன்ற நடுவராக பணியமர்த்தம் செய்யப்படுதல் வேண்டும் என்பதைக் குறிப்பிடும் பொருட்டு அரசு மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 27/2014 இன் 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவை திருத்தம் செய்வதென முடிவு செய்திருக்கிறது.

2. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எஸ்.பி. வேலுமணி,**
*நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள்*
*மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.